அ.வ.எண்: 92/2022 நாள்: 12.03.2026

வா.சா 1 – ர ாஜாங்கம்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. என்னுடைய மாமனார் தான் வாதி நடராஜன் என்றால் சரிதான். எந்த வகையில் அவர் எனக்கு மாமனார் என்றால் அவரது மகளை நான் திருமணம் செய்ததால் அவர் எனக்கு மாமனார் ஆவார். மேற்படி நடராஜன் தற்போது எங்கு உள்ளார் என்றால் வீட்டில் தான் உள்ளார். அவர் உடல் நலனுக்கு என்ன பிரச்சனை என்றால் அவருக்கு முழங்கால்கள் இரண்டும் வளைந்து விட்டதால் அவரால் நடக்க முடியவில்லை. மேற்படி நடராஜன் நல்ல மனநிலையில் தான் உள்ளாரா என்றால் நல்ல மனநிலையில்தான் உள்ளார். ஆனால் வயது மூப்பின் காரணமாக காது கேட்காது. நான் எனது மாமனார் வீட்டில் தான் உள்ளேன் என்றால் அவ்வப்போது சென்று வருவேன் நான் தேவகோட்டையில் உள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில என்னுடைய விலாசமாக எதை குறிப்பிட்டுள்ளேன் என்றால் உஞ்சனை கிராம விலாசத்தை குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய ஆதார் அட்டையிலும் உஞ்சனை கிராம விலாசம் தான் உள்ளது என்றால் சரிதான்.

2. தாவா வழக்கு தாக்கல் செய்த காலத்தில் எனது மாமனாருக்கு

உடல்நிலை இவ்வாறு தான் இருந்ததா என்றால், அப்பொழுது காலை தாங்கி தாங்கி அவர் நடப்பார். நான் தற்போது தாவா சொத்து அமைந்துள்ள ஊரில் வசிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் பௌதீகம் மற்றும் எல்லை ஆகியவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு தாக்கல் செய்யும்போது எனது மாமனார் நல்ல மனநிலையிலும் நடையுடையுடனும் இருந்தார் என்றால் சரிதான். நான் எதற்காக எனது மாமனாரின் பவர் ஏஜென்ட் ஆக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால், அவருக்கு படிப்பறிவு இல்லை மற்றும் அவரால் நடக்க முடியவில்லை அதனால் நான் பவர் ஏஜெண்டாக வழக்கு தாக்கல் செய்தேன். எனது மாமனாருக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் கையெழுத்து மட்டும் செய்வார். தாவா வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் 2020 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது.

3. பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக கூறிய பொழுது, நான் ஊரில் தான் இருந்தேன் என்றால் சரிதான். என்ன மாதிரியாக பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால், தாவா சொத்தின் கிழக்கு பகுதியில் சுமார் 4.6 அடி இடத்தை சேர்த்து காம்பவுண்ட் சுவர் எழுப்பி உள்ளனர். 4.6 அடி என்பது உயரமா அகலமா என்றால் அகலம் ஆகும். மேற்படி காம்பவுண்ட் சுவரின் உயரம் என்ன என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. அதன் நீளம் என்ன என்றால் 109.5 அடி ஆகும். மேற்படி ஆக்கிரமிப்பு நாங்கள் இருக்கும் போது தான்

நடைபெற்றது என்றால் சரிதான், கொரோனா காலத்தில் நடைபெற்றது. மேற்படி ஆக்கிரமிப்பு பற்றி எனக்கு எவ்வாறு தெரியவந்தது என்றால் அவர்கள் காம்பவுண்ட் சுவர் எழுப்பும்போது நாங்கள் தடுத்தோம், பின்பு சர்வேயரை கொண்டு அளக்கும் பொழுது அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளது எங்களுக்கு தெரியவந்தது.

4. சர்வேயர் தாவாசொத்தை அளந்து அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் புகைப்படங்களை தாக்கல் செய்துள்ளோம். சர்வேயர் எப்பொழுது தாவா சொத்தை அளந்தார் என்றால் 13/5/2020 அன்று தாவா சொத்தை அளந்தார். நான் எனது பிராதில் தாவா சொத்து என்று எதை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சர்வே எண் 301/1–ஐ தாவா சொத்தாக குறிப்பிட்டுள்ளேன். பிராதில் வேறு சொத்துக்கள் எதையும் நான் தாவாசொத்தாக குறிப்பிடவில்லை என்றால் இல்லை ஒரு இலக்க சொத்துக்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்தேன். "எ ஷெட்யூல்" சொத்து என்று எதைக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் நாங்கள் தற்போது வைத்துள்ள இடத்தை குறிப்பிட்டுள்ளேன். "பி ஷெட்யூல்" என்று எதை குறிப்பிட்டுள்ளேன் என்றால் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தை குறிப்பிட்டுள்ளேன். "சி ஷெட்யூல்" என்று எதை குறிப்பிட்டுள்ளேன் என்றால் "எ ஷெட்யூல்" மற்றும் "பி ஷெட்யூல்" இவற்றை சேர்த்து "சி.செட்யூலாக" குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியும்.

5. தாவா பிராதில் மேற்கு நான்குமாலாக என்ன குறிப்பிட்டுள்ளேன் என்றால், சந்து என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்படி சந்து என்பது யாருடைய இடம் என்றால், அது பொதுவாக பயன்படுத்தப்படும் பாதை ஆகும். மேற்படி சந்து பொது பாதை என்பதற்கான என்ன ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேன் என்றால், எனக்கு வழங்கப்பட்ட பட்டாவில் மேற்படியிடம் சந்து என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வி.ஏ.ஓ சான்று கொடுத்துள்ளார். **(சாட்சியிடம் வா.சா.ஆ 1 ஆவணம் காட்டப்பட்டது)** என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் சொல்லும் பட்டாவா என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் சந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், மேற்கு பக்கம் 81 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது, சந்து என்று குறிப்பிடப்படவில்லை. சர்வே எண்.81 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சீதையம்மாள் என்பவர் பெயருக்கு தற்போது தான் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பட்டா மாற்றம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நடைபெற்றதா என்றால் இல்லை, வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் பட்டா மாற்றம் செய்யப்பட்டது.

6. தாவா சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் வந்தாரா என்றால் வந்தார். மேற்படி வி.ஏ.ஓ தாக்கல் செய்த அறிக்கையில் மேற்கு நான்குமாலாக என்ன காட்டப்பட்டுள்ளது என்றால், சர்வேஎண்.81 காட்டப்பட்டுள்ளது. ஆனால் வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் அதற்காக பட்டா மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்கு பக்கம் சர்வே எண்.81 தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி சர்வே எண் 81 என்பது சந்தா என்றால் அது பற்றி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து ஆன சர்வே எண் 301/1–க்கு கிழக்கே யாருடைய இடம் உள்ளது என்றால் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண். 301/2, 301/11, 301/12 ஆகிய இடங்கள் உள்ளது. நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்த அறிக்கையில் உள்ள வி.ஏ.ஓ அறிக்கையில் தாவா சொத்திற்கு மேற்கே 81/5B2 சீதையம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. மேற்படி சர்வே எண்.81/5B2 என்ன வகைப்பாடு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண் புஞ்சை வகைப்பாடு என்றும், எங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை அந்த இடத்தில் விட்டுக் கொடுத்துவிட்டு பிரதிவாதிகள் மீது ஆக்கிரப்பு செய்து விட்டதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்து உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளரும் தனது அறிக்கையில் தாவாசொத்திற்கு மேற்கே சர்வே எண் 81/5B2 உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகள் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 என்ன ஆவணம் என்றால், பட்டா ஆகும். மேற்படி ஆவணத்தின் மேலே என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் தோராய பட்டா என்று எழுதப்பட்டுள்ளது. தோராய பட்டா என்றால் என்ன என்று தெரியுமா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் பட்டா இல்லை என்றும், அது வருவாய் துறையினரால் அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றும் சொன்னால் சரியல்ல.

8. மேற்படி தோராய பட்டாவை தவிர அசல் பட்டா ஏதேனும் வைத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் தற்போதைய பட்டா எண் தெரியுமா என்றால், அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. மேற்படி தோராய பட்டாவில் என்ன விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 6.8 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தை வழங்க கிராம நிர்வாக அலுவலருக்கு அதிகாரம் உள்ளதா என்றால் உள்ளது. கிராம நிர்வாக அலுவலர் அடங்கல் கொடுக்க முடியாது என்றும், வட்டாட்சியர் தான் கொடுக்க முடியும் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தை கிராம நிர்வாக அலுவலர் அடங்கல் கொடுக்க முடியாது என்றும், வட்டாட்சியர் தான் கொடுக்க முடியும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறப்படும் இடத்திற்கானது இல்லை என்றும், அது நான் வசித்து வரும் வீட்டிற்க்கான வரி ரசீது என்றும் சொன்னால் அது சர்வே எண் 301/1 வரி ரசீதுகள் தான். வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களுக்கும் தாவாசொத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.12,13 ஆவணம் எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால், பிரதிவாதிகள் காம்பவுண்ட் சுவர் எழுப்பியதற்காக ஒரு புகார் கொடுத்ததற்கும் மீண்டும் அவர்களிடம் பேசிய போது அவர்கள் எங்களுக்கு சொந்தமான மரங்களை வெட்டியதால் அவர்கள் மீது மறுபடியும் ஒரு புகார் கொடுத்தும் அதற்கான ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன்.

9. வா.சா.ஆ.14,15 ஆவணங்களான புகைப்படங்கள் மற்றும் சிடியை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் எங்களுக்கு சொந்தமான மரங்களை வெட்டி பிரச்சனை செய்தார்கள். அதற்காக மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை நான் எத்தனை ஆண்டு காலமாக அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சுமார் 50 ஆண்டு காலமாக அனுபவம் செய்து வருகிறோம். 50 ஆண்டுகள் அனுபவம் செய்வதற்கான ஆவணங்கள் எதுவும் என்னிடம் உள்ளதா என்றால், வீடு கட்டியுள்ளோம் அதற்கான வரி ரசீதுகள் இருக்கும். தாவாசொத்தின் மேற்கு பகுதியை அளக்கவில்லை என்றும், மேற்படி மேற்கு பகுதியை அளந்தால் தான் யார் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரிய வரும் என்று சொன்னால் சரியல்ல. நான் திட்டமிட்டு மேற்கு பகுதியை சந்து என கூறி மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாசொத்தின் மேற்கு பகுதி சந்து என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.நான் கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கின் வியாஜ்ஜியமூலம் தவறு என்றும் நான் நீதிமன்ற கட்டணம் குறைவாக கட்டியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.12 16:23:33 +0530